**O.S.No.23/2014**

**DW 1:** பாபு தேதி 17.02.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் மற்றும் 4, 6 பிரதிவாதிகள் சேர்ந்து தான் எதிர் வழக்காடுகிறோம். அ வ எண். 20/98 வழக்கை நானும் 4, 6 பிரதிவாதிகள் சேர்ந்து தான் நடத்தினோம். நாங்கள் 3 வரும தொழில் கூட்டாளிகள் என்றால் சரியல்ல. 4 ,6 பிரதிவாதிகள் என் அப்பா ஆகியோர் ஆசிரியராக பணிபுரிந்தவர்கள். என் அப்பா ஆசிரியர் பணியுடன் பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தாரா என்றால் இல்லை. 4, 6 பிரதிவாதிகள் ஆசிரியராக பணிபுரிந்தார்கள். கிரைய ஒப்பந்தம் 4 ம் பிரதிவாதி பேரில் 5, 6 பிரதிவாதிகள் சேர்ந்து போடப்பட்ட அக்ரிமென்ட் என்றால் சரியல்ல. அ வ எண் 20/98 என்பது கிரைய ஒப்பந்த வழக்கு. அ வஎண் 20/98 தாக்கல் செய்து கிரையம் பெறும் வரை நானும் 4, 6 பிரதிவாதிகளும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரிதான். என்னுடைய தந்தை ராஜகோபால் அந்த ஏரியாவில் அனைவருக்கும் தெரிந்த பைனான்சியர் என்று சொன்னால் சரியல்ல. நடராஜ் பழனிச்சாமி ஆகியோர்களும் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பிறகு 1996 ல் வெள்ளோட்டில் சென்னிமலை ரோட்டில் வளர்மதி பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பிறகு நானும் 4, 6 பிரதிவாதிகளும் மேற்படி பைனான்சில் கூட்டு பங்குதாரர்களாக இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல பைனான்ஸ் நடத்தியதில்லை என்று சொல்கிறேன். வாசாஆ 6 மற்றும் வாசாஆ 7 ஐ 4 ம் பிரதிவாதி எனக்கும் பழனிச்சாமிக்கும் கிரையம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.31 ஏக்கர். இவ்வழக்கில் அது தாவா சொத்து. வாசாஆ 6 கிரைய பத்திரத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு தலா 0.43 7/8 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் மூவரும் சரிசம கூட்டாளிகள் என்பதால்

தான் அவ்வாறு தலா பிரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் 4 6 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் தவிர வேறு உறவு முறை இல்லை என்று சொன்னால் சரியல்ல எங்களுக்கிடையே கொடுக்கல் வாங்கல் இல்லை. 1, 2 பிரதிவாதிகளின் சொந்த ஊர் கொம்மகோயில் பெருந்துறை ஆர் எஸ். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எந்த ஊரில் குடியிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதும் போது 1 , 2 பிரதிவாதிகள் எந்த ஊரில் வசித்தார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 1 , 2 பிரதிவாதிகளுக்கு கொம்மகோயிலில் பூர்வீக சொத்துகள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகளின் ஊர் எது என்று தெரியாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் கொம்மகோயிலில் என்று தெரியும் அதன் பின் எங்கு குடி போனார்கள் என்று தெரியாது. 1 , 2 பிரதிவாதிகள் ஊர் குமாரவலசு என்றால் அது எனக்கு தெரியாது. குமாரவலசு என்ற இடம் எனக்கு தெரியும். 3ம் பிரதிவாதி கொம்மகோயில் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் குடும்ப விவரம் மற்றும் உறுப்பினர்கள் பற்றியோ எனக்கு தெரியாது என்றால் அவர்கள் குமாரவலசிற்கு எப்போது குடிவந்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடும் போது கொம்மகோயிலில் தான் இருந்தார்கள். நான் **MBA** படித்திருக்கிறேன். வாசாஆ 4 ல் 2ம் பிரதிவாதியின் விலாசம் குமாரவலசு என்று தான் உள்ளது என்றால் சரிதான். 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்துகள் எந்த ஊரில் எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1 மற்றும் 3 பிரதிவாதிகளும் வாதிகளும் அவர்களுக்கு சேர்ந்த பூர்வீக சொத்துகளை அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டு தனித்தனி அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். 2ம் பிரதிவாதி லோகாத்தாள் வீட்டு மனைவியாக இருந்தார என்றும் அவர் வேறு தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆடு மாடுகள் வைத்திருந்தார். எத்தனை ஆடு மாடுகள் வைத்திருந்தார் என்று தெரியாது.

எனக்கு நேரடியாக தெரியாது லோகாத்தாள் சொல்லி தான் தெரியும். அவர் ஆடு மாடுகள் வைத்திருக்கவில்லை என்றும் வீட்டு மனைவியாக தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு வேறு சொத்துகளோ அதில் வருமானமோ இருந்ததில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு அவருடைய கணவர் 1ம் பிரதிவாதி தான் அனைத்தும் என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களுடைய பூர்வீக சொத்துகளை பொறுத்து வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 விற்று விட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பூர்வீக சொத்தை விற்ற தொகை மற்றும் பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு 8.6.94 ல் தாவா சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வருமானம் இருந்தது என்று சொல்கிறேன். கிரையம் வாங்கும் போது 1ம் பிரதிவாதி அவருடைய பூர்வீக சொத்தை விற்றதை கொண்டும் அதில் வந்த வருமானத்தை கொண்டும் 2ம் பிரதிவாதியான மனைவி பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. சின்னசாமி வாசாஆ 3 பத்திரத்தின் படி பாதி பங்கை கிரையத்திற்கு வாங்கினார் என்றால் சரியல்ல. எந்த மூல பத்திரத்தை பார்த்து நாங்கள் கிரைய ஒப்பந்த பத்திரம் போட்டோம் என்றால் அது தெரியாது. வாசாஆ 4 கிரைய ஒப்பந்தம் போட்டதற்கு மூல பத்திரம் இல்லாமல் தான் தயாரித்தோம் என்றால் அது எனக்கு தெரியாது. நடராஜ் ,பாபு மற்றும் பழனிச்சாமி ஆகியோரில் விபரம் தெரிந்த நபர் யார் என்றால் நடராஜ் தான். எனக்கு இதை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்காக கிரைய தொகை கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பூர்வீக சொத்தின் வருமானம் மற்றும் பூர்வீக சொத்தை விற்ற வந்த தொகையை கொண்டு வாசாஆ 3 ன் படி கிரையம் வாங்கியதில் அச்சொத்துகள் பொது குடும்ப சொத்துகள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/8 பாகம் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 4 கிரைய ஒப்பந்தம் மற்றும் வாசாஆ 8 , வாசாஆ 9 தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பில் வாதிகள் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். எவ்வளவு கிரைய தொகை பேசப்பட்டது முன் தொகை கொடுக்கப்பட்டது எவ்வளவு

காலக்கெடு வைக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வாதி தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளின் பங்கையும் சேர்த்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டு வாசாஆ 8,9 தவறான தீர்ப்பு தீர்ப்பாணை பெற்று கொண்டோம் என்றால் சரியல்ல. வாசாஆ 4, 5, 8, 9 வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாசாஆ 4 வாதிகளின் குடும்ப நன்மைக்காக போடப்படவில்லை என்றால் சரியல்ல. 8.4.96 ல் வாசாஆ 3 ன் படி கிரையம் பெற்று அதை 14 நாட்களில் வாசாஆ 4 ன் படி கிரையம் போட வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொத்தை விற்க வேண்டிய அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரையம் வாங்கிய 14 நாளிலேயே கிரைய ஒப்பந்தம் போட வேண்டிய அவசிய தேவை இல்லை என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்துகள் 2 3 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துகள் அல்ல என்றும் அவை பூர்வீக சொத்துகளின் வருமானம் மற்றும் கிரையம் செய்த வகையில் வாங்கப்பட்ட கிரையத்தை கொண்டு வாங்கப்பட்டது என்பதால் அது பொது குடும்ப சொத்து என்று சொன்னால் சரியல்ல. அ வ எண் 93/2025 என்ற இந்த நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்கும் இந்த வாதிகளுக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் இல்லை. அ வ எண்.93/2025 ல் வாதி பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றம் ஏற்படுத்தி கொடுத்த வாசாஆ 5 கிரைய பத்திரத்தின் படி நாளது வரை நாங்கள் சுவாதீனம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல சுவாதீனம் எடுத்து கொண்டோம். வாசாஆ 5 ல் வாதி இந்த நீதிமன்ற மூலம் இதன் அடியில் கண்டுள்ள சொத்துகளை சுவாதீனம் எடுத்து கொள்ள வேண்டியது என்ற வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான் ஆனால் சுவாதீனம் எடுத்து கொண்டோம். எந்த தேதி மாதம் வருடத்தில் சுவாதீனம் எடுக்கப்பட்டது என்றால் 8.2.2001 ல் சுவாதீனம் எடுக்கப்பட்டது. நாங்கள் சுவாதீனம் எடுத்து கொண்டதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் சுவாதீனம எடுக்காமல் இருப்பதால் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும் நாளது வரை வாதிகள் மற்றும் அவரது

குடும்பத்தார்கள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5.26 ஏக்கர். அதில் 1.31 ஏக்கரில் அதில் எங்களுக்கு தலா பங்கு 0.43 7/8 வாங்கியிருக்கிறோம். தாவா சொத்தில் யார் யார் கூட்டு பங்குதாரர்களாக இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது . அந்த கூட்டு பங்குதாரர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்களா என்பது தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் ரூ.1 லட்சம் கேட்டதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்து விட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படுவதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசா 3 ராமசாமி 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கடன் வாங்கும் போது உடன் வந்த நபர் என்றால் சரியல்ல. ராமசாமி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் பைனான்ஸ் நடத்தும் போது பாதுகாப்பிற்காக சொத்தை அக்ரிமென்ட் போடுவது வழக்கம் என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பணம் கட்ட கால தாமதம் ஆனதால் வாசாஆ 4 அக்ரிமென்ட்டை வைத்து பொய்யாக அ வ எண்.20/1998 என்ற வழக்கில் தவறான தீர்ப்பு தீர்ப்பாணை பெற்று அதன் பேரில் கிரைய ஒப்பந்த ஆவணம் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.